# மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ



கழகத்தின் பொருள்காப்பாளர் கலைஞர்

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 23—10—60 ஒலி 51

# டெல்லியைக் கண்டேன்!

★★★

டெல்லியைக் கண்டேன்! நம்மை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் டெல்லியைத்தான கண்டேன்! தென்னகத்தை அடிமைப்படுத்தி, திராவிடத்தின் வளத்தை, செழிப்பை, செலவத்தை உதிரம்போல் குடித்து ஒதிபோல உபபி வளர்ந்து வாழும் டெல்லியைத்தான் கணடேன்! நெஞ்சம் கொதித்தேன்! நேர்மையிலா வஞ்சகத்தை எணணி, எண்ணி உள்ளம் துடித்தேன்!

வடக்கு வேறுதான், தெற்கு வேறுதான் - இதில் துளியும் சந்தேகமில்லை! டெல்லி வேறு, சென்னைவேறுதான் -இதிலும எதுவும் சந்தேகமில்லை!

நடையால், உடையால்-பாவனையால், பேச்சால்-எண்ணத்தால, செய்கையால்-பண்பால், நாகரீகத்தால்-பழக்க வழக்கங்களால் டெல்லியும், சென்னையும் முற்றிலும்வேறுபட்டே இருக்கிறது!

ஆஙகிலம் தெரிந்தவன் கூட ஆங்கிலத்தில் பேசுவதில்லை—இந்தியில்தான் பேசுகிறான்! மொழி வெறி யாருக்கு! டெல்லி கடைவீதிகளை சுற்றிப் பார்க்காத நமது அமைச்சர்களுக்கு இது தெரியாது, சொனனாலும் இது புரியாது!

ஆக்ராவிலிருந்து டெல்லி பட்டணம் முடிகிறவரையில் இரு ஓரங்களிலும்—ரயில் பாதையின் இருமருஙகிலும் சதா கககிக கொண்டிருககும் புகையால வானததை கறுப்பாககிக் காட்டிடும் தொழிற்சாலைகள்—எழும்பிய எழும்பிக் கொண்டிருக்கிற தொழிற்சாலைகள் அத்தனையும நம்முடைய அமைச்சர்களின் கண்களில் பட்டதா இல்லையா? இவைகளைப் பார்த்த பின்புமா வடக்கும், தெற்கும் ஒன்று!

கண்ணை வண்ணத்தால் கவ்வும் கட்டிடங்களுக்கும், கண்டால் மினுக்கிடும் மினுமினுப்புக்கும், பார்த்தவரை மயக்கும் ஜொலி ஜொலிப்புக்கும் யார் காரணம்? யார் வீட்டு செலவத்தால இந்த நிலை வந்தது?

போடப்பட்ட அஸ்திவாரங்களில் கற்களை அடுக்கிக் கொணடே செல்லுகிறார்கள்! மேலும் அஸ்திவாரங்களை போட்டுக கொணடே போகிறார்களா!

கற்கள் அடுக்கப்பட்ட அஸ்திவாரங்கள் கட்டிடங்களாக உருவெடுததுக் கொண்டே இருக்கின்றன—மேலும் கற்களை அடுக்கிக கொண்டே போகின்றனர்!

உருவெடுத்த கட்டிடங்கள் புகைகளை கககிக் கொண்டே இருககின்றன—கட்டிடங்களாக உருவெடுகக இன்னும பல இடங்கள காத்து நிற்கின்றன! இதையெல்லாம் கண்ட பின்பும்—"வடக்கும, தெற்கும் ஒனறு" என்றால் உணமையிலேயே பைத்தியககாரர்களாகத் தான இருக்க வேண்டும்! அல்லது பதவிப் பித்தர்களாகத்தான் இருககவேண்டும்! சொந்த சுகபோகங்களுக்காக பதவியை நாடி நாட்டைக் காட்டிக் கொடுப்பது நல்லதல்ல!

ஊர் உறங்கிக் கொண்டிருக்கிற வேளையில்—நாம் தனியாக இல்லாத தலைவிதி காரணத்தால் நம்முடைய தலைநகர் என்றுச் சொல்லிக கொள்ளும் டெல்லிப் பட்டணத்திலிருந்து—எனக்கு உற்ற துணையாக இருந்து உதவிபுரியும் "டீ"யின் துணைகூட இன்றி இந்த மனக் குமுறலை, இந்த உள்ளக கொதிப்பை உங்களிடம் சொல்லுகிறேன்!

"ஏன், "டீ" தண்ணீருக்கும் பஞ்சமா" என்று கேட்பீர்கள்! ஆளத்தெரியாதவர்கள் ஆட்சியில் டீக்கு பட்டுப்தான பஞ்சம் ஏற்படும்! இன்னும எவை எவைகளுக்கெல்லாமோ பஞ்சமேற்படக கூடும்!

'டெல்லியில் "டீ" கிடைக்கவில்லை என்று சொல்லவில்லை! "டீ" கிடைக்கும்! ஆனல் அந்த டீயில் பாலுதான் கிடைககாது! அப்படியே பால கிடைததாலும, அந்த பாலில் தண்ணீர்தான் ஆதிக்கம் செலுத்தும்! அப்படியே தண்ணீர ஆதிககம் செலுத்தினலும் அந்த 'டீ" தேவைப்படுகிறபோது, கிடைக்காது!

டீ—2 பங்கு

பால்—1 பங்கு

தண்ணீர்—97 பங்கு

இதன் விலையோ :0 காசுகள்! அதேபோல் தான் எல்லா விலையும் மிக உயரத்தில்—அமெரிக்காவிலுள்ள மாளிகைகளைப்போல் வானத்தைத் தொட்டு முத்தமிட்டுக் கொண்டிருக்கின்றன!

தோசை—35 காசுகள்

மசால் தோசை—40 காசுகள்

இட்லி—25 காசுகள்

காபி—25 காசுகள்

டீ—20 காசுகள்!

சாப்பாடு—1 ரூபாய்!

இது மிகச் சாதாரண ஹோட்டல்களில் உள்ள விலையாகும்! இன்னும் சீமான்கள் தங்கும் ஓட்டல்களில், பூமான்கள் தங்கும் ஓட்டல்களில் என்ன விலையோ?

பொதுவாக உடையில் மட்டுமல்ல, உணவிலும்கூட இங்கு கொஞ்சமும் நாகரீகம் கிடையாது!

தென்னாட்டு மக்கள்—ஏழைகள் அல்ல—நடுத்தர மக்கள் கூட இங்கு வாழவே முடியாது!

இந்தத் திருகூத்தில் விற்பனை வரி வேறு தனியாக உண்டு! ஒரு ரூபாய்க்கு சாப்பிட்டால் 4 காசுகள வரி தரவேண்டும்!

இரண்டு ஐந்தாண்டு திட்டங்கள் முடிந்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை செயலாககப் போகும் வீரர்களின் ஆட்சியைப் பற்றி—கனம, காமராஜரும், கனம் கக்கன்ஜீகளும், கனம் சுப்பிரமணியங்களுமதான் பெருமையடிததுக கொள்ளவேண்டும்!

இதே நிலை இன்னும் சிறிதுகாலம் நீடிக்குமானல் நாட்டிலே என்ன நடைபெறும், எததகைய பயஙகர நிகழ்ச்சிகள் உருவாகும் என்பதை எந்த ஜோதிடனும் சொல்லமுடியாது!

பூகம்பமும், புயலும், இடியும், மின்னலும், காற்றும், மழையும ஏற்படுவதற்கு முன்பு நம்முடைய அமைச்சர்களாவது புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளவேண்டும!

தவளையோடு சேர்ந்த எலியின் பரிதாபக் கதைக்கு நம்முடைய அமைச்சர்கள் ஆளாகி வீணாக அவப்பெயரை சம்பாதித்து தனக்கும், தன் சந்ததிகளுக்கும் தன் நாட்டிற்கும துரோகம் விளைக்கக் கூடாது என்பது எங்களுடைய எண்ணமாகும்!

அமைச்சர்கள்தான் பதவிக்காக ஆசைப்பட்டு அடிமைப் புத்தியோடு வடவர்களுக்கு பல்லவி பாடிவருகிறார்கள் என்றால் கொடி தூக்கித் திரியும்காங்கிரஸ்காரர்களுக்கு இந்த அடிமைத் தனம் ஏனோ என்றுதான் புரியவில்லை!

சென்னையிலும், மதுரையிலும், திருச்சியிலும், தஞ்சையிலும் சுற்றித் திரிந்துகொண்டிருக்கும் கொடி

(7ம் பக்கம் பார்க்க).

## ஆட்சியாளர்களே எச்சரிக்கை

# தென்னகத்தில் புகைந்து கொண்டிருக்கும் பயங்கர எரிமலை வெடிக்கப்போகிறது!

## ஆணவம் பிடித்தவடவர் ஆட்சிக்கு 1962ல் சமாதி!

## நெய்வேலித் திட்டத்திலும் நெய் வடவருக்கு; வேலிதான் நமக்கு!

## திராவிடம் மலரட்டும்! தீவினை ஒழியட்டும்! தென்னகம் புது வாயிலில் நுழையட்டும்!

### சென்னையில் கலைஞர் கருணாநிதி போர்ப்பரணி!

சென்னை சிந்தாதிரிப்பேட்டை சிங்கண்ணச் செட்டித் தெருவில் 13—10—60ம் நாள் மாலை 6-மணிக்கு திருமதி குப்பம்மாள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைநிலையக் கட்டளைப்படி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட அநீதி கண்டனம் விமரிசையாக நடைபெற்றது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அநீதியைப் பற்றியும், ஓர வஞ்சனையைப் பற்றியும் முன்னாள் மேயர் அ. பொ. அரசு, வே. கபிலன் ஆகியோர் பேசினார்கள்.

கடைசியாக கழகத்தின் பொருள் காப்பாளரான கலைஞர் கருணாநிதி பேசியதாவது:


அன்புள்ள தலைவர் அவர்களே! பெரியோர்களே! நண்பர்களே! தாய்மார்களே!

இன்று இங்கே நடைபெறுகின்ற சிறப்புமிக்க கூட்டத்தின் குறிக்கோளை முன்னாள் மேயர் அரசு அவர்களும், கபிலனும் எடுத்துரைத்தார்கள்.

இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் அண்ணா அவர்களின் அறிக்கைப்படி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட அநீதி எதிர்ப்பு வாரத்தை கண்டன நாளாக கொண்டாடுகிறோம். நாம் கொண்டாடுகின்ற இதே நேரத்தில்தான், தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் நம்மைவிட சிறப்பாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி காங்கிரசார் பிரச்சாரம் செய்துவருகின்றனர்.

([illegible] 11)

நாங்கள் கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் உங்களுக்குள் என்ன செய்திருக்கிறோம். அதுபோலவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் செய்வோம். நீங்களெல்லாம் திட்டத்திற்கு ஆதரவாக பணிபுரிய திரண்டு வாருங்கள் என்று அழைக்கிறார்கள்.



தென் நாட்டிலிருக்கின்ற ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம், இந்த நான்கு மாநிலங்களையும் வெளியே நில்லுங்கள் என்று சொல்லிவிட்டு இவர்கள் மாத்திரம் (வடக்கு) வாழவழி செய்து கொள்வதை நாம் எதிர்த்து இன்று நாடெங்கிலும் கண்டனக் கூட்டம் நடத்துகின்றோம்.

இதைக் காணுகின்ற அமைச்சர்கள் காங்கிரசு பிரமுகர்கள், பத்திரிக்கையிலே விடுகின்ற அறிக்கைகளும் மேடையிலே பேசுவதும் எப்படியிருக்கிறது என்றால் தெரியுமா சங்கதி என்று ஆரம்பித்ததும் கூடியிருக்கின்ற மக்கள் ஏதோ தமக்கெல்லாம் தெரியாத புதிய செய்தியை சொல்லப் போகிறார்கள் போலிருக்கிறது என்று நினைக்கும் போது தி. மு. க. வினர் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எதிர்க்கின்றனர் என்று சொல்லி [illegible] பேசுகிறார்கள். [illegible] அங்கே பேசுகின்றார்கள் [illegible] பத்திரிக்கையிலே பார்க்கின்றோம். [illegible] மேடைகளில் பேசுகிறார் [illegible] கூடியிருக்கின்ற [illegible] படித்தவர்கள் இருப்பார்கள் என்ற எண்ணிக்கை [illegible] அவர்களில் 100க்கு 2 பேர் அல்லது மூன்று பேர் படித்தவர்களாக தெரிவார்கள். அவர்களைப் பற்றி கவலையில்லை [illegible] இருப்பவர்கள் எல்லாம் [illegible] போலத் தான் என்று எண்ணிக் கொண்டு பேசுகிறார் [illegible]

முதல் மாதம்

## சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உணவு உற்பத்தி பிரமாதம்! பஞ்சம் ஒழியும்!

இரண்டாம் மாதம்

## பற்றுக் குறையை நிவர்த்தி செய்ய நாடெங்கும் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும்!

இப்படிப் பிதற்றும்

# பக்தவத்சலமே! நீர் ஆட்சி புரிகிறீரா? அங்காடிக் கடை விற்கிறீரா?

நாம் திட்டமே தேவையில்லை என்று சொல்வதாகச் சொன்னால்: இதை நம்புகின்ற மக்கள் பைத்தியக்காரர்களாகத் தான் இருப்பார்கள். நாம் திட்டத்தையே எதிர்க்கவில்லை. திட்டத்திலே தென்னாட்டிற்கு இழைக்கப்பட்டிருக்கின்ற தீங்கை எதிர்க்கிறோம். அநீதியை எதிர்க்கிறோம். முதலாவது திட்டத்திலே கேட்டதொகை சென்னைக்கு கிடைத்ததா என்றால் இல்லை. இப்படியே தொடர்ந்து போடுகிற திட்டங்களில் எல்லாம் தமிழகம் வஞ்சிக்கப்பட்டால், இந்தக்கொடுமையைத்தான் சட்டமன்றத்திலே தி. மு. கழகம் எடுத்து வைத்தது. அதை எண்ணிக்கைப் பலம் இருக்கிற காரணத்தால் அமைச்சர்கள் ஏற்கவில்லை மக்கள் மன்றத்திலே எடுத்து சொல்லுவதற்குதான் நாம் கண்டன நாளைக் கொண்டாடுகிறோம்.

இந்த எண்ணங்கள் தவறானது என்று மறுக்க முடியுமா? சட்டமன்றத்தில் நிதியமைச்சர் பேசும்போதுசொன்னார். மாநிலங்களுக்குள் காட்டப்படுகிற ஏற்றத் தாழ்வை ஏதோ நாமெல்லாம் ஆதாரமில்லாமல் பேசுவது போல புள்ளி விவரத்தோடு பேசவேண்டும் என்றார். சொன்ன 4, 5 நாட்களுக்கெல்லாம் தொழிலமைச்சர் வெங்கட்ராமன் டில்லிக்குப் போனார், மாநிலங்களுக்குள் ஏற்றதாழ்வு கூடாது என்று பண்டித நேருவிடத்தில் வெங்கட்ராமன் சொன்னபோது முதுகில் தட்டிக் கொடுத்து உண்மைதான் என்றார். இதற்கு ஆதாரமான சில புள்ளி விவரத்தை அமைச்சர் வெங்கட்ராமன் எடுத்துக்கொடுத்தபோது குல்சாரிலால் நந்தாவும், மொரார்தேசாயும் பார்த்துவிட்டு நேருவிடம் சொல்ல, நேரு இது சரியில்லை என்று தூக்கி முகத்திலே எறிந்தார். மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலே 1200 மைல் ரயில் பாதை வட பகுதிக்கு மட்டும் போடப்படுகிறதே இது சரிதானா என்று தி. மு. க. கேட்டது. உடனே பக்தவச்சலம் மீசை இல்லாத காரணத்தினால் தோளை தட்டிக்கொண்டு போனார் டில்லிக்கு. கேட்ட நேருவை இந்த இந்தப் பகுதியில் இத்தனை இத்தனை மைல்கள். மொத்தத்தில் 1200 மைல் ரயில்பாதை மூன்றாவது திட்டத்தில் போடப்பட்டிருக்கிறதே இவைகளில் ஏதாவது ஒன்று தென்னாட்டுக்கு கொடுங்கள் என்று கேட்டார். ஒரு மைல் கூட போடமுடியாது என்றதும் எந்த தண்டவாளத்தில் தலையைக் கொடுப்பது என்று தெரியாமல் இங்கே வந்துவிட்டார். நாம் சொல்லுகிற குறைகளை அங்கே போய் எழுப்பி முக்குடைப்பட்டு வருகிறார்கள்.

போராட்ட திட்டம் யாருக்கு? பஞ்சத்தாலே பட்டினி கிடந்து உயிர்துறக்கிறானே ஏழைக் குடிமகன் அவனுக்கா? இங்கே இருந்து பிழைக்க முடியவில்லை என்று ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் இருந்து 30 பேர் கள்ளத்தோணியில் இலங்கைச் சென்று கடலால் தின்னப்பட்டு, மீன்களால் கொத்தப்பட்டு உருதெரியாமல் போனார்களே அவர்களுக்காகப் போடப்பட்டதா இந்தத்திட்டம். இங்கே தலை கிள்ளப்படுகிறது என்று பயந்து இலங்கைக்குச் சென்றால் தேயிலையாவது கிள்ளிப்பிழைக்கலாம் என்று ஓடினானே அவனுக்காகப் போடப்பட்டதா? மீண்டும் வடதிசை கொழுக்க இன்னும் அங்கே இரண்டு ஹிராகுட், அணைக்கட்டுகள், இரண்டு ரூர்கேலா, இரண்டு பிலாய் தோன்ற இவைகளுக்காக போடப்பட்டதே தவிர தென்னாடு வாழ்வதற்காகப் போடப்பட்ட திட்டமா என்றால் இல்லை, இதை தான் எதிர்க்கிறோம்.

இப்படிப்பட்ட அவலநிலை உள்ளதை வேறு எந்த கட்சியாவது எடுத்துச் சொல்லுகிற ஆற்றல் தைரியம் பெற்றிருக்கிறதா என்றால் இல்லை. வரி வழங்குகிறோம்காம். வாழ்கிறது

(11ம் பக்கம் பார்க்க)

## பச்சைத் தமிழர் வருகையும் காங்கிரஸ் குண்டர்கள் வெறியாட்டமும்!

***

### கர்ப்பிணியின் வயிற்றிலே உதைத்தான் காந்தி பக்தன்!!

## சேலத்தில் காங்கிரஸ் ரௌடிகளின் கோரத்தாண்டவம்

சேலம் சட்டமன்ற உறுப்பினர் ஏ. மாரியப்பன் படத்தை, முதலமைச்சர் காமராசர் அவர்கள் அம்மாபேட்டை கைத்தறி நெசவாளர் சங்கத்தில் திறந்துவைத்த நிகழ்ச்சியை அடுத்த இந்தச் சம்பவம் நடந்தது.

சம்பவம் குறித்து போலீசு நிலையத்தில் புகார் செய்யச் சென்ற 9 தோழர்களையும் போலீசார் தாக்கினர்.

போலீசார் அந்த 9 பேரையும் போலீசு நிலையத்தில் அடித்தது மட்டுமல்லாமல், மேற்படி தோழர்களை மாரியப்பன் படத்திறப்பு விழாப் பந்தலுக்கு அருகில் கொண்டுவந்து நடு வீதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் அடித்தார்கள்.

தோழர்கள் அனைவரையும் கோர்ட்டுக்குக் கொண்டு செல்லவோ, ஜாமீனில் விடவோ இல்லை. தோழர்கள் என்ன ஆனார்கள் என்பதும் தெரியவில்லை.

போலீசு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள பொன்னுசாமி என்கிற தோழரின் மனைவியையும் (9மாத கர்ப்பிணி) காங்கிரசுக் காலிகள் அடித்துத் துன்புறுத்தியதால் அவர் வயிற்றில் அடிபட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார். அவருடைய வீட்டின் ஓடுகளை எல்லாம் உடைத்து வீட்டைப் பெருத்த சேதத்துக் குள்ளாக்கியிருக்கின்றனர்.

# காங்கிரசின் கடைசி அத்தியாயத்தை பண்டித நேரு எழுதுகிறார்!

## இந்தியாவின கடைசி சர்வாதிகார பீடம் 1962ல் தகர்க்கப்படுமா?

சர் ஆக்டேவியன் ஹியூம் என்ற ஆங்கிலத் துரை மகனால் ஆரம்பிதது வைக்கப்பட்ட காங்கிரஸ் ஸ்தாபனம் 1962-ம் ஆண்டோடு கரைந்து உருதெரியாமல் போய்விடுமோ என்ற பெரிய அச்சம், காங்கிரஸ்காரர்களிடையேயும் — "அய்யோ பாவம், ஆட வேண்டிய ஆட்டம் பாடவேண்டிய பாட்டு, கூற வேண்டிய கதை அத்தனைக்கும் முற்றுப் புள்ளி வைக்காமல் ஏனோதானோ வென்று ஆடி, பாடி, பேசி அழிந்து விட்டதே" என்ற கவலை உண்மையிலேயே நமக்கும் ஏற்படத்தான் செய்யும்!

காந்தியாரால் நாள் தோறும் காக்கப்பட்டு — இரும்பு மனிதர் வல்லபாய் படேலால் வளர்க்கப்பட்டு பின் சந்திரபாலால் போற்றப்பட்டு- மோதிலாலால் பேசப்பட்டு — சத்தியமூர்த்தியால் மேடைதோறும் பேசி வளர்க்கப்பட்ட காங்கிரஸ் இறுதியாக தனது சரித்திரத்தின் கடைசி அத்தியாயத்தை "இந்தியாவின் கடைசி ஜனநாயகவாதி' யும்காங்கிரஸுக்காக மனைவியையும்பொன்னையும், பொருளையும் பறிகொடுத்தவர் எனறு போற்றப்படும நேரு பெருமகனால்கண்ணீர் சொரிய எழுதப்படப் போகும் பரிதாபத்தை நினைக்கும்போது உண்மையிலேயே நமக்கு மட்டுமல்ல, உலகில் உள்ள அத்தனை பேருக்குமே விம்மலும், வேதனையும்தான் வெளிக் கிளம்பும்!

"அசாம் மாநில சட்டசபையில் வெளிநடப்பு!

"அசாமில் மொழி காக்க 3000 பெண்கள் போராட்டம்',

"உத்திர பிரதேச முதலமைச்சர் சம்பூர்ணாநந்த் பதவியிலிருந்து ராஜிநாமா!"

"அசாம் முதலமைச்சர் சாலியா விலகல்!"

"மைசூர் முதலமைச்சர் ஜெட்டி பதவிக்கு முழுக்கு!

ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவையா பதவியிலிருந்து ஓட்டம்!

"ஒரிஸா முதலமைச்சர் ஹரிகிருஷ்ண மகதாப் விலகல்!"

"சிறையில் அகாலியர் உண்ணாவிரதம்",

—போன்ற திடுக்கிடும் செய்திகள் தினம் தினம் ஒவ்வொரு மாநிலங்களிலிருந்தும் வெளிவந்தவண்ணமாகவே யிருக்கின்றன!

குழப்பமும், கூச்சலும் அடிதடிகளிலும் பாரதத் திருநாடெங்கும் பரவிக் கிடக்கின்றன. காங்கிரஸுக்குள்ளேயே அடிதடி, குழப்பம், கலவரம்!

இப்படிப்பட்ட இக்கட்டான நேரத்தில் தான் நேரு பெருமகனார் ஐக்கியநாடுகளின் சபைக்குச் சென்றிருக்கிறார். உலக அரங்கிலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் குழப்பங்களை தீர்த்து வைக்க விரைந்து சென்றிருக்கிறார். சென்ற அவர் சிறப்பான சொற்பொழிவை பொழிந்திருக்கிறார். குருச்சேவ் பாராட்டி இருக்கிறார்; நாசர் புகழ்ந்திருக்கிறார்; அடினார் 'ஆஹா' என்றிருக்கிறார் டிட்டோ 'அடடா' என்றிருக்கிறார்; நிக்குருமா பிரமாதம் என்றிருக்கிறார். நாமும் பலே பலே என்று பாராட்டுகிறோம். அதே நேரத்தில் அவர் சிந்திய அந்த மொழிகளில் உள்ள சிலவற்றையும் நாம் சிந்திக்க வேண்டும். அவர் அந்த இந்தியாவைப் பற்றி — இந்திய ஒற்றுமையைப்பற்றி— இந்திய மக்களின் உழைப்பைப் பற்றி எவ்வளவு அருமை பெருமையுடன் பேசி இருக்கிறார் என்பதை நினைக்கும்போது உலக அரங்கில் நேருவின் பகட்டுக்கும், வேஷத்திற்கும் உள்ள காரணத்தை மிகத் தெளிவாக உணர முடியும்!

"My own mind is naturally filled with broblems of my country and our passionate desire to develop and to put an end to the poverty and low standards wich have been a curse to our hundreads of millions of people."

"உலக சமாதானம் என்பது அறத்தின் அடிப்படையிலே எழும் அவசியம் மட்டுமல்ல, இன்றைய நடைமுறைக்கு அவசியமான—தேவையானதொன்று" என்று ஐ.நா. சபையிலே முழக்கமிடும் நேரு- படை பலக்குறைப்பைப்பற்றி பேசும் நேரு —காங்கோவின் துயரத்தைப் பற்றி விளக்கும் நேரு—ஆப்பிரிக்காவின் பிரச்சினையைத் தீர்க்க அருமையான மூன்று யோசனைகளைக் கூறி பாராட்டுதலைப் பற்ற நேரு — அல்ஜீரியாவைப்பற்றிய அவசரப் பிரச்சினையைக் குறிப்பிட்ட நேரு— சிறுவைப்பற்றி சொல்லாடிய நேரு — ஆப்பிரிக்க-ஆசிய தீர்மானத்தை அனுசரிக்கும் முறையைபற்றிப் பேசிய நேரு ஒருவருக்கும் தோல்வி இல்லை— எல்லோருக்கும் வெற்றி என்று முழங்கி முடித்த நேரு இடை

(8ம் பக்கம் பார்க்க)

## ஐந்தாண்டுத் திட்டமா? வடநாட்டுத் திட்டமா?

### வாழ்வு அங்கே! வறுமை இங்கே!

●

### தென்னாட்டைச் சுரண்டி வடநாட்டை வாழவைப்பவைதான் ஐந்தாண்டுத் திட்டங்கள்!

❂❂❂

1950ம் ஆண்டிலிருந்து 1960 வரை நாம் டெல்லிக்கு செலுத்திய வரிப்பணம் ஆண்டு ஒன்றுக்கு 70 கோடி ரூபாய், அப்படி தமிழகம் மட்டும் இந்தப் பத்தாண்டுகளில் தந்த தொகை 700 கோடி ரூபாயாகிறது. இந்த 700 கோடி ரூபாயில் இந்தப் பகுதியிலே என்ன தொழில் ஏற்படுத்தினார்கள்? எத்தனை தொழிற்சாலைகள், அணைக்கட்டு ஏற்படுத்தப்பட்டன? வேறு என்ன செய்தார்கள்? எடுத்துக் காட்டமுடியுமா?


இருந்திருந்தும் அவர்கள் தெற்கு தேயவில்லை என்று காட்ட பெரம்பூர் கோச்பேக்டரி ஒன்றைத்தான் காட்டுகிறார்கள். குருஷேவ் வந்த போதும் அதைக்காட்டினார்கள்.

வராஷிகிலோவ் வந்தபோதும் அதையே காட்டினார்கள்; இரண்டாண்டுகள் கழித்து டிட்டோ வந்தபோதும், நாசர் வந்தபோதும் அதையே காட்டினார்கள்! 10 ஆண்டுகளில் வேறு ஒரு தொழிற்சாலை உண்டா? இங்கு தயாராகும் பெட்டியாவது தென்னகம் பக்கமுள்ள ரயில்களில் பார்க்க முடிகிறதா? பழைய காலத்துப்பெட்டிகளைத்தான் பார்க்க முடிகிறதே ஒழிய புதிய பெட்டிகளை எங்கே காண முடிகிறது. அந்த பெரம்பூர் கோச்பேக்டரிக்கு மட்டும் 700 கோடி ரூபாயில் 8 கோடி அளித்தால் போதுமா?

அடுத்து கூறப்போனால் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தைப்பற்றி கூறுவார்கள். அதற்கென்று 78 கோடி ஒதுக்கியிருப்பதாக பெருமைபோடு கூறுகிறார்கள். மூன்று திட்டங்களுக்கென, அதாவது மின்சாரம், உரம், இரும்பு ஆகிய துறைகளுக்காக எடுக்கப்படும் நிலக்கரி பயன்படுகிறது. அப்படி எடுக்கப்பட்ட நிலக்கரியினால் ஏற்படும் பயன்—லாபம் யாருக்குத் தெரியுமா, அன்பர்களே? டில்லிக்கு-நமக்கல்ல! 78 கோடி மூலதனத்திலே இங்கே ஏற்பட்டது உண்மை யென்றாலும் அதன் பயனில் 75 சதம் அவர்களுக்கு நமக்கு 25 சதம் மட்டும் தான்"

இங்கு ஏற்றுமதிவரி, இறக்குமதிவரி, சுங்கவரி, தேயிலைவரி, தபால்வரி, தந்திவரி, வருமானவரி, விவசாயவரி, தீப்பெட்டிவரி, ரப்பர்வரியென்று கணக்கில்லாமல் வரிமூலம் வசூலித்து அங்கே பக்ராநங்கலும், சிந்திரியும், ரூர்கேலாவும், பிலாயும், உண்டாக்கிவிட்டால் போதுமா? வரிப்பணம் அங்கே; வதைபடுவது நாங்களா? லாபம் அங்கே; சோகம் இங்கேயா"

**நாவலர் நெடுஞ்செழியன்**



# தேர்தல்புரி யாத்திரை

பி.எஸ்.இளங்கோ

"அத்தான்! எப்படியத்தான் இருக்கிறது!"

"கற்கண்டு போல் இருக்கிறது. கனிரசம் போல் இருக்கிறது, மாம்பழக் கீற்று போலிருக்கிறது!"

"இம்! அப்புறம்!"

"தேனில் குழைத்த பலாச் சுளைபோல் இருக்கிறது. சக்கரைப்பாகில் கலந்த பால்போல் இருக்கிறது!"

"என் கணவருக்கு கவிதை கூட தெரியும் போலிருக்கே?"

"கவிதை மட்டும்தானா தெரியும்? இந்தப் பேசும் சித்திரத்தை நிறுத்திவைத்து ஒரு பேசாத சித்திரத்தையே வரைந்து காட்டுவேன்!"

"ஓகோ! பாடம் அவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டதா?"

"எல்லாம் என் குருநாதரின் தயவுதான்!"

"அது, யார் அத்தான் உங்கள் குருநாதர்!"

"எனக்கு பாடம் சொல்லித் தந்தவர்தான்!"

"அந்த குருநாதர் யாராம்!"

"நீ, தான் சொல்லேன் சுந்தரி!"

"சுந்தரியா? அது யாராம் அந்த சுந்தரி!"

"ஏன்? நீ அழகாய் இல்லையா?"

"அத்தான்! நான் உங்கள் கண்ணுக்கு அழகாய் இருக்கேனா?"

"வண்ணமதியை தோற்கடிக்கும் உன்வட்ட வடிவான முகம், பிறைபோல் வளைந்து தெளிந்து கூத்தடும் உன் புருவர், கடித்தால் இனிக்கும் உன் மாம்பழக் கன்னம், தொட்ட உதட்டை இனிக்க வைக்கும் உன் செந்தேன் உதடு எல்லாம் சேர்ந்து உன்னை அழகி என்று சொல்லுகிறது சுந்தரி!

"இதையெல்லாம் எங்கே கற்றீர்களாம் அத்தான்!"

"இந்த சுந்தர உடலில் நான் கற்றுக் கொண்ட பாடம் இது மட்டுமல்ல சுந்தரி!"

"ஓகோ! இன்னும் கூட இருக்கா!"

"ஓ! இன்னும் எத்தனையோ பாடங்கள் நானும், நீயும் சேர்ந்துப் படிக்க வேண்டியது இருக்கு! சொல்லித் தரட்டுமா?"

"வேண்டாம், வேண்டாம்! பொழுது விடிய போவுது, தூங்குங்க. நாளைக்குச் சொல்லித் தரலாம்!

"ஏன், தூக்கம் வந்து விட்டதா?"

"ஆமப், ஆமாம்! நாளை காலையில் ஒரு டின்னருக்கு போகனும்!"

"டின்னரா! அது எங்கே சுந்தரி!"

"இங்கே தான்! பக்கத்து ரூமிலே, என்னுடைய சிநேகிதி சாந்தாதேவி நடத்துரா?"

'அது யார் சாந்தாதேவி? எதற்காக டின்னர் நடத்துறாங்க!" ராஜன் முகத்தில கொஞ்சம் மாறுதல ஏற்படத்தான் செய்தது!

இந்தியாவிலிருந்து சமூக சேவகி சாந்தாதேவி இந்த நாட்டுத் தேர்தல் நடைமுறைகளை தெரிந்து கொள்ளுவதற்காக வந்திருக்காங்க! அவுங்க நாளைக்கு விருந்து வைக்கப் போறாங்களாம்! போதுமா சொன்னது!" அந்தப் பெண் மணி கொஞ்சம் குறும்போடு தான் பதில் சொன்னாள்!

"அப்படியா!" "ராஜன் பத்துநிமிடம் வரை பேசாமலேயே கன்னத்தில் கையை வைத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான்!

"ஏனத்தான்! ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க!"

"ஒன்றுமில்லை சுந்தரி! என் மனசு சரியாக இல்லை! அவ்வளவுதான்!" ராஜன் படுக்கையில் எழுந்து உட்காந்தபடியே இருந்தான்!

'சும்மா சொல்லுங்க அத்தான்!" அவள் கெஞ்சினாள்

"ஒன்றுமில்லை சுந்தரி, ஒன்றுமில்லை!' அவன் கவலை அவனுக்குத்தானே தெரியும்!

"இப்போ சொல்லப் போறிங்களா, இல்லியா?" அவனுடைய முகத்தை தன் கையால் அவள பக்கம திருப்பி வைத்துக் கொண்டு கெஞ்சினான்!

"என்னை வீணாக தொந்தரவு செய்ய வேண்டாம்! கொஞ்ச நேரம் என்னை சும்மா விட்டாலே போதும்" ராஜனுக்கு மனம் நிம்மதியே இல்லை! அலை கடல் துரும்புபோல் அங்கும் இங்கும் அலைபாய்ந்துக் கடந்தது!

'சரி! நீங்கள் சொல்லவேண்டாம்! படுத்துக் கொள்ளுங்கள்! அவன் அவனுடைய மனக் கவலையை போக்க பெரிதும் முயற்சித்தான்!

"வேண்டாம்! கொஞ்ச நேரம் இப்படியே உட்கார்ந்திருக்கிறேன்" அவன் பிடிவாதம் பிடித்தான்!

"ராஜா! உடம்புக்கு ஆகாது ராஜா! படுத்துத் தூங்குங்கோ! நாளைக்கு பாத்துக்கிலாம்!" கணவன், மனைவி என்றால் எவ்வளவு பாசம் ஏற்பட்டுவிடுகிறது!

"உடம்புக்கு ஒன்றும் வராது சுந்தரி! கவலைப்படாதே! நீ படுத்துத் தூங்கு!" அவன் அப்படியே உட்கார்ந்திருந்தான்!

அவள் அவனை விடவில்லை! தன் தொடைமீது அவனை படுக்க வைத்துக் கொண்டு அவளும் அப்படியே உட்கார்ந்திருந்தாள்!

அவனுடைய கண்களிலிருந்து நீர்த்துளிகள் பொட்டுப் பொட்டாக விழுந்து அவளது புடவையை நனைத்தது!

"அத்தான்! இதென்ன கண்ணீர்! ஏனத்தான் அழுவுறிங்க" அவனுடைய கண்களை அவள் துடைத்துக் கொண்டிருந்தாள்!

அவளுடைய சிந்தனையும் எங்கோ சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தது! ஏன் இவர் அழவேண்டும்? சாந்தாவைப்பற்றி இவருக்கு முன்பே ஏதாவது தெரியுமா? சாந்தாவின் பெயரைச் சொன்வுடனேயே இவர் அழக் காரணமென்ன? ஒரு வேளை இவருக்கும், அவளுக்கும் ஏதாவது உறவு இருந்திருக்குமா? சேச்சே! இவர் அப்படிப்பட்டவராக தெரியவில்லையே! ஊமை தான் ஊரைக் கெடுக்கும் என்பார்களே, அதுபோல ஏதாவது இருந்தால்?" என்றெல்லாம் யோசித்துக்கொண்டே இருந்தாள்! முடிவில் தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு ஒருவாறு சமாதானமடைந்தாள்!

அவனும் அவள் தொடையில் படுத்தபடியே அயர்ந்து தூங்க ஆரம்பித்தான்!

(தொடரும்)

(12ம் பக்கத் தொடர்ச்சி)

மலிந்து கிடக்கும் காங்கிரஸ் கட்சியின் பரமபக்தர்களால் இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது என்பதை நாம் அறிவோம்! பின் யாரால் பதிலளிக்க முடியும் ?

பதிலளிக்கக் கூடிய ஒரு பெரும் சகதியைப் பெற்ற ஒரே ஒருவர் உள்ளார்! அவர்தான்--

பந்த் அல்ல !

சஞ்சீவிரெட்டி அல்ல !

காமராசர் அல்ல !

சுப்பிரமணியம் அல்ல !

திருட்டு விழி விழிக்கும் கக்கனல்ல !

ராமபக்த ஹனுமான் பக்த வத்சலமல்ல !

யாருமல்ல ! எவருமல்ல !

"நேரு கூட அல்ல !"

அவர் தான்!—

இவ்வளவு ஆண்டுகளாக—உத்தமர்களால் வளர்க்கப்பட்டு—ஊதாரிகளால் இருப்பிடமாக கப்பட்டிருக்கும் காங்கிரஸ்¬கு கல்லறை எழுப்பிக் கொண்டிருக்கும்—காங்கிரஸ் சரித்திரத்தின் கடைசி அத்தியாயத்தைப் படித்து முடித்துக் கொண்டிருக்கும்—

காங்கிரஸ் என்ற தீபச் சுடர் சீராக ஒளி கொடுக்காமல்—சினந்து எரிந்து ஊரையே அழிக்கப் போகிறது என்பதை உணர்ந்து முடிவுகாண விழையும்—


அஞ்சாத—

துஞ்சாத-

அழிக்கமுடியாத—

திருவாளர் பொதுஜனம் !

ஆமாம், அவர்களால்தான் பதிலளிக்க முடியும் ! – பதிலளிக்கவேண்டிய நிர்பந்த சூழ்நிலையில் அல்லவா அவர்கள் இன்று இருக்கிறார்கள் ?




# தலைநகரில் தமிழர்கள் !

## பிச்சை எடுக்கும் கோரக் காட்சிகள் !

## வெட்கமில்லை !

## நமக்குத் துக்கமில்லை !

***

"இமயத்தை வென்றான், அங்கே புலி கொடி நாட்டினான்" என்று நம்மைப்பற்றி நாமே பெருமை யடித்துக் கொள்ளுகிறோம் !

அந்தத் தமிழன் பரம்பரை இன்று டெல்லி தெரு வீதிகளிலே திருவோடு ஏந்தி நிற்கும் கோர நிலைக்கு வந்து விட்டது ! இதை கண்ணால் காணும்போது உள்ளமெல்லாம் கொதிக்கிறது, நெஞ்சமெல்லாம் வெடிக்கிறது !

தமிழர்கள், டெல்லியிலே பெரும் பெரும் உத்தியோகங்களில் இருக்கலாம் ! இல்லை என்று சொல்லவில்லை ! தமிழர்களுக்கு இருக்கிற ஆற்றல், தமிழர்களுக்கு இருக்கிற அறிவு, தமிழர்களுக்கு இருக்கிற திறமை காரணமாகத்தான் பெரும் உத்தியோகங்களை வகிக்கிறார்கள் ! தமிழர்களுடைய அறிவும், திறமையும் தேவைப்படுகிறது ! எனவேதான் தமிழர்களைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் ! இதனால் நாம் மனச்சாந்தியை அடைந்து விடமுடியாது !

தமிழர்கள், டெல்லி தெரு வீதிகளிலே கையை நீட்டி காலணா, அரையணாவை கெஞ்சி, கெஞ்சி, கூத்தாடி, கூத்தாடி கேட்கும் நிலை உண்மையிலேயே நமக்கு இழுக்கையும், ஒரு பெரும் களங்கத்தையும் உண்டாக்கும் நிலையாகும் !

பொதுவாக, தமிழன் என்றால் சேவலமாக, கீழ்த்தரமாக நினைக்கிறார்கள் ! இதைப் பற்றி நாம் கொஞ்சமும் வெட்கப்படவில்லை ! ஒரு துளியும் துக்கப்படவில்லை !

காமராஜனரைப் பற்றி புகழ்மாலை பாடுபவர்கள் இதைப் பற்றியும் கொஞ்சம் எண்ணிப்பார்க்க வேண்டும் ! ஆட்சியைத் திறமையோடு நடத்தினால் மட்டும் போதாது ! நாட்டின் மானத்தையும் காப்பாற்ற வேண்டாமா ? அதை யார் செய்வது ?

(தலையங்கம் தொடர்ச்சி)

தூக்கிடும் முத்தண்ணாக்கள் டெல்லி வீதிக்கு போகட்டும் ! டெல்லியின் கொடுமையை காணட்டும் ! அப்போதாவது புத்தி வராதா பார்ப்போம் !

டெல்லிப் பட்டணத்திற்கு எவர் வந்தாலும், எந்தக் கட்சிக்காரர்கள் வந்தாலும் நிச்சயமாக அவர்களுக்கு விடுதலை உணர்ச்சியை—"டெல்லி வேறு, சென்னை வேறு" என்ற எண்ணத்தை ஊட்டத்தான் செய்யும் !

டெல்லியில் கண்டதைச் சொன்னேன்—சந்தேகமிருப்பவர்கள் டெல்லியைக் காணட்டும்—கண்டபின்பாவது திராவிடம் கேட்கட்டும் !

பி. எஸ் இளங்கோ

# ரூர்கலாவில் பெருந்தலைகளின் மோசடி!

## லட்சோப லட்ச ரூபாய்களை விழுங்கும் முதலைகள் ஜாதிவெறியால் சதிராட்டம்!

(5ம் பக்கத் தொடர்ச்சி)

யிலேதான் குறிப்பிடுகிறார் இந்தியாவைப்பற்றி!

"எனது இந்திய மக்கள் சுபீட்ச வாழ்வு காண வேண்டுமென்ற உழைப்பைப் பற்றியும் —எங்களது சாபத்தைப் போன்ற வறுமைக்கு ஒரு முடிவு காணவேண்டும், தாழ்ந்த பல்லாயிர மக்கள் முன்னேற வேண்டும்—என்பதைப் பற்றிய பிரச்சினைகளும் இயற்கையாகவே எனது மனதில் நிரம்பி இருக்கின்றன." என்று தனது பாரதத்தின் மீது கொண்ட அக்கறையை — மக்களின்மேல் கொண்ட அன்பை அங்கே சொல்லுகிறார்!

உண்மையிலேயே நாம் நேருவைப் பாராட்டத் தான் வேண்டும்! நேருவின் பொறுப்பை—அவரது உயர்ந்த சிந்தனையை நாம் நினைத்து மகிழத்தான் வேண்டும்!

ஆனால், அதே நேரத்தில் அவருக்குள்ள பொறுப்பு—அவருக்குள்ள சிந்தனை இந்திய துணைக் கண்டத்திலே உள்ள காங்கிரஸ்காரர்களிடையே இல்லாமல்-—ஊதாரித்தனமாக வகுப்புவாதக் கிளர்ச்சியிலும், தப்புப் பிரச்சார ஈடுபாட்டிலும்) பதவி மீது கொண்டுள்ள ஈனசப் பாசையிலும், ஈடுபட்டு காங்கிரசை குழிதோண்டி புதைக்கிறார்களே என்ற வருத்தமும் ஏற்படுகிறது.

மொழிப் பிரச்சினையைப் பற்றி நேரு ஒரு கருத்தை வெளியிட்டால், பந்த் வேறொரு கருத்தை செயல் முறைக்குக் கொண்டு வருகிறார். இரண்டுக் குமிடையில் இங்குள்ள காமராசரும், சுப்பிரமணியமும் ஒரு பக்கம் வாலையும், ஒரு பக்கம் தலையையும் காட்டும் ஜென்மங்களாக இருக்கிறார்கள்!

ஆந்திரத்து முதன்மந்திரி ஒரு கருத்தை வெளியிட்டால் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் சஞ்சீவி ரெட்டி வேறொரு கருத்தை வெளியிடுகிறார். அல்லூரியோ ஆவேசமாகப் பாய்கிறார்.

சம்பூர்ணானந்த ஒருவரை நிறுத்தி வெற்றிபெற முயற்சித்தால் அவர் தோற்று சந்திரபானுகுப்தா வெற்றிபெருகிறார்!

இப்படி காங்கிரஸ், ஆட்சிபீடத்திலுள்ள பெருந்தலைகளால் மட்டும் சரையவில்லை! நீண்ட நெடுங்காலமாக அசைக்கமுடியாத பெரியஸ்தாபனமாக வளர்ந்துவிட்ட காங்கிரஸ்-நாட்டிலே மலிந்து கிடக்கும்லஞ்சங்களாலும், பொறுப்புள்ளவர்கள் செய்யும் மோசடிகளாலும், லஞ்சத்தாலும், பணக்காரர்களின அட்டகாசத்தாலும், பெரும் பெரும் ஆலைகளில் நடைபெறும் அக்ரமங்களாலும் தேய்கிறது—சவக்குழிக்கு அனுப்பப்படுகிறது.

உதாரணத்திற்கு ஒருசிலவற்றை எடுத்துக் காட்டுகிறோம்.

கோடிக்கணக்கான ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்ட ரூர்கலா இரும்பு-எஃகு தொழிற்சாலை எந்தநிலையிலே இப்போது இருக்கிறது? எதிர்பார்த்த அளவுக்கு அதிலிருந்து பலன் கிடைக்கிறதா? என்பதை ஆராய்ந்தால் ஆட்சியாளர்களின் திட்டமும்—அந்ததிட்டம் நிறைவேறிய லட்சணமும்—அந்த லட்சணத்தின் வெட்கக்கேடும் புலனாகும்!

ரூர்கலா இரும்பு எஃகுத் தொழிற்சாலை ஒரு நாளைக்குக் கொடுக்கக்கூடிய உற்பத்தி அளவு 1000 டன் என்று எதிர்பார்த்தார்கள். அதாவது கூட்டி, கழித்து, பெருக்கி திட்டவட்டமாக புள்ளிவிபரத்தோடு கூறினார்கள் ஒரு நாளைக்கு மேற்கூறிய உற்பத்தி அளவு கிடைக்கும் என்று—கிடைக்கவேண்டுமென்று!

ரூர்கலா இயங்கி 22 மாதங்கள் ஆகின்றன. இந்த 22 மாதங்களில் ஒரு நாளாவது 500 டன்னுக்கு மேல் உற்பத்தி அளவு கிடைக்கவில்லை!

இந்த அசாத்திய திட்டமிட்ட நுண்ணறிவு சிகாமணிகளை நாம் எப்படிப் பரராட்டுவது? என்ன சொல்லிப் பாராட்டுவது? ஏற்பட்ட 500 டன் உற்பத்தி நஷ்டத்திற்கு யார் பொறுப்பாளி? கோடிகோடியாக பணத்தைக் கொட்டியும்; உற்பத்தி அளவு 500 டன் நஷ்டமென்றால் மக்கள் காரி உமிழும் எச்சல் எந்த மானங்கெட்டவர்களின் மீது விழுவது?

மேலும் தொழிலகத்தில் மிக முக்கியமான ஒரு இயந்திரம் ஒருமணிக்கு 100 டன் உற்பத்தி அளவைக் கொடுக்கவேண்டுமென்று கணக்கிட்டு ஒருநாளைக்கு 2400 டன் உற்பத்தி அளவு கிடைக்கும் என்று தீர்மானித்தார்கள். ஆனால் அந்த இயந்திரத்தில் பழுது ஏற்பட்டு இப்பொழுது ஒரு நாளைக்குக் கொடுக்கும் அளவு 450, அல்லது 500 டன்!

தொழிலகத்தில் சேதமடைந்த பெரிய கரண்டிகளைப் பற்றிய நஷ்டதொகைகள் அவ்வப்பொழுது பத்திரிகைகளில் வெளிவந்தன. அவைகளை இப்போது கூட்டிப்பார்த்தால் பெரும் திகைப்பைத்தரும் தொகை கூடுவதை அறியலாம். இரும்பு உருக்கு உலையிலிருந்து வெளியாகும் கொதிக்கும் உலோகம் பெரிய கரண்டிகளில் வந்து விழும். அந்த கரண்டிகள் அவ்வப்போது கவனிக்கப்படாத காரணத்தால் கூடிய சீக்கிரத்திலேயே சேதமடைந்து விடுகிறது. இவ்வாறு சேதமடைந்த கரண்டிகள் 20. இவைகளுக்கான நஷ்டத்தொகை 90,000! இது மட்டுமா?

சமீபத்தில் மூன்றாவது ஜெனரேட்டரும் மூடப்பட்டு விட்டதாக செய்திகள் வருகின்றன.

இவ்வாறு ஏற்பட்ட சேதங்களை எல்லாம் நிவர்த்தி செய்ய தேவைப்படும் ரூபாய் 12 லட்சம் என்று கணக்கிடப் படுகிறது!

இந்த அநியாயத்தை பொது மக்கள் எப்படி சகிக்கமுடியும்? ரூர்கலா இரும்பு எஃகுத் தொழிற்சாலை இயங்க ஆரம்பித்தால் அமோக உற்பத்தி கிடைக்குமென்று பிரச்சாரம் செய்தார்கள். ஆசியாவிலேயே மிகப் பெரிய பிரமாண்ட இரும்பு எஃகுத் தொழிற்சாலையாக ரூர்கலா இருக்கும் என்றார்கள். ஆனால் வெட்கக்கேடு, ரூர்கலாவின் நிலையை விளக்கக்கூட முடியவில்லை.

தொழில் உற்பத்தியிலும், தொழிலகநிலையிலும் தான் இந்த அக்கரமங்கள் நடைபெறுகின்றன என்றால் அலுவலகத்திலும் பெரும்பெரும் மோசடிகளும், ஜாதிவெறிகளும் தாண்டவமாடுகின்றன!

ரூர்கலா இரும்பு எஃகு உற்பத்தித் தொழிற்சாலையில் சுமார் பத்தாண்டு அனுபவம் பெற்ற சிறந்த எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் அனுபவமும் திறமையும் புறக்கணிக்கப்பட்டு அவர்கள் இன்னும் தொழில் பயிலுபவர்களாகவே மதிக்கப்பட்டு 380 முதற்கொண்டு 410 ரூபாய் வரை தான் ஊதியம்பெறுகிறார்கள்.

ஆனால் மூன்றும் ரக—சிறந்த பயிற்சியைப் பெருதவர் களெல்லாம் பதவி உயர்வால் ஊதியத்தை அபரிமிதமாகப் பெறுகிறார்கள். இதற்குக் காரணம் யார் என்று அங்குள்ளவர்களைக் கேட்டால் அங்குள்ள ஒரு உயர் எஞ்சினியர், அதாவது சுமார் எட்டாண்டுகள் துணிவியாபாரியாக இருந்து விட்டு மீண்டும் இந்த உத்தியோகத்தைப்பெற்ற அந்த பெரிய மனிதரின் திருவிளையாடல்கள் தான் இம்மாதிரியானவைக்குக் காரணம் என்று கூறுகிறார்கள். பதவி உயர்வைத் தீர்மானிக்கும் ஒரு பொறுப்பு வாய்ந்த பிரிவில் ஜாதிக்கொடுமை தாண்டவமாடுவதாக செய்திகள் கிடைக்கின்றன!

ஒரு பட்டதாரி திடீரென்று உதவிப்-பொது மேற்பார்வையாளராக மாற்றப்பட்டிருக்கிறார். இதற்கு அந்த பட்டதாரி பெற்ற ஒரே தகுதி அவரது தகப்பனார் அங்கு எஃகு கண்ட்ரோலராக இருந்த ஒன்றுதானும்!

ஒரு ஓய்வுப் பெற்ற 'வைதீகப் புலி' மீண்டும் சுகாதார இலாகாவுக்கு எஞ்சினியராக சேர்க்கப்பட்டிருக்கிறார்!

இவ்வாறு எத்தனையோ அநியாயங்களை தனது செல்வாக்காலும், ஜாதிமதப் பிரிவாலும், சில பெருந்தலைகள் ரூர்கலாவில் செய்து வருகின்றன. இதற்குத்தானா காங்கிரஸ் ஆட்சி பீடம் அந்நிய நாட்டிலிருந்து கடன் வாங்கியும், மக்கள் வரிப் பணத்தை எடுத்தும் தொழிற்சாலைகளை நியமிக்கின்றன? இதைத் தட்டி கேட்க தைரியமில்லாத காங்கிரஸ், ஆட்சிப் பீடத்திலே அமர்ந்திருப்பதன் அர்த்தமென்ன?—யோக்யதைதான் என்ன?

ஐ.நாவிலே பேசிக் கொண்டிருக்கிற நேரு குறிப்பிடுகிறார்: 'எனது சிந்தனை அடிக்கடி இந்தியாவிலுள்ள விவசாயிகளிடம் போய்வந்து கொண்டிருக்கிறது. நாங்கள் எவரையும் பின்பற்றவோ, வெல்லவோ விரும்பவில்லை. எங்களது எண்ணம், எங்களின் கட்டுப்பாட்டை வளர்க்கவும், நல்ல வாழ்க்கை நடாத்த சந்தர்ப்பமளிக்கவும் பயிற்சிபெற வேண்டுமென்பதே" என்று!

இப்படி அல்லும் பகலும் இந்தியாவைப் பறற நினைக்கின்ற நேருவுககு வாய்த்த சிஷ்ய கோடிகள் அக்ரமங்களின்

(12ம் பக்கம் பார்க்க)

# காங்கிரஸ் கட்சித் தலைவர் சஞ்சீவிரெட்டிக்கு ஆயுள் தண்டனை?

## காந்தியின் பூதவுடலை சுட்டு அழித்தவன் கோட்ஸே!
## காந்தியின் புகழுடலை சுட்டு எரித்தவர் சஞ்சீவி!

## விருதுநகர் ராக்கெட் கோவை டாங்கியைத் தாக்குமா?
## கோவை டாங்கி செங்கற்பட்டு கொரில்லாவை அழிக்கும்?

### ஜாதிச் சண்டை மலிந்த காங்கிரஸுக்கு பொதுமக்களின் தீர்ப்பு என்ன?

பாரதமெங்கும் மகான் காந்தியின் பிறந்த நாள் விழா வெகு சிறப்பாக நடைபெறுகிறது. வழக்கம்போல காங்கிரஸ் பக்தர்கள் காந்தியைப் பற்றி ‘அப்படி, இப்படி’ என்று, ஆகா, ஊகூ என்று கற்ற வித்தையையெல்லாம் கொட்டி சொற்சிலம்பமாடுகிறார்கள்!

“தீண்டாமையை ஒழித்தவர், அஹிம்சையைப் பரப்பியவர், மானிட ஜென்மத்திற்கே ‘வரப் பிரசாதமாக’—பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக அரிய பெரிய கண்டுபிடிப்பான கதர் ராட்டையை அளித்துக் காத்தவர், தீண்டப்படாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டோரை ‘ஹரிஜனங்கள்’ என்று அழைத்தசீலர், காருண்ய புருஷர், சுதந்திரப் பிதா என்றெல்லாம் வாய்ப்பந்தல் போட்டு ஒரு ‘தேர்தல் ஸ்டண்ட்’டையும் நடத்தி உச்சி குளிர்ந்திருக்கிறார்கள்!

இந்த நேரத்தில்தான் இன்றுள்ள காங்கிரஸ் பரமபக்தர்களுக்கு—அப்படிக் கூறும் போலிகளுக்கு—அவர்கள் தெரியாத ஒன்றை-தெரிந்தும் மறைக்க-மறக்க எண்ணும் ஒரு மணிவாசகத்தை சமர்ப்பிக்க எண்ணுகிறோம்.

1940ல் காந்திஜீ கூறிய இந்த ‘தீர்க்க தரிசன மணிவாசகம்’ 1958ம் ஆண்டு ஜனவரி 25ம் தேதி வெளிவந்த “தி சாட்டர்டே ரிவ்யூ” என்ற ஆங்கில இதழில் வெளியான ஒரு சிறப்புமிக்க தலையங்கத்தில் கூறப்பட்டிருக்கிறது!

“எனக்குப் பின்பு காந்தியம் ஒரு ஜாதியமாக இருக்குமானால் அது அழிக்கப்படவேண்டும். எனது மறைவுக்குப் பின்பு எந்த ஜாதியக் கொடுமைகள் அழிய வேண்டுமென்று கூறுகிறேனோ, அவைகள் அதற்கு மாறாக வளர்க்கப்பட்டு அந்த செய்தி எனக்குக் கிடைத்தால் அதைப் போன்ற ஒரு வேதனையை நான் என்றும் தாங்கமுடியாதவனாகவே இருப்பேன்”

இதைப் படித்ததும் நமக்கு ஆச்சரியமும், அதே நேரத்திலே அவர் தனக்குப் பின் வரப்போகும் மகா மகா சீடாதி சீடர்களைப் பற்றி கொண்டிருந்த நம்பிக்கையும் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது! காந்தி கண்ட கனவை இன்று இந்தியாவில், அசையும் காற்றிலே ஆடும் தூசி முதற்கொண்டு பிரம்மாண்ட திட்டம் வரை தரதிபலிக்கச் செய்கிறோம் என்று அவர்கள் பிரச்சாரம் செய்ய மறக்கவில்லை!

ஆனால்?...

நடைபெறுவது என்ன? காந்தி அன்றைய தினம் கூறியபடி காந்தியப் போர்வையிலே ஜாதிக்கொடுமை, மதக் கொடுமை முதலியன நடைபெறும் அதிசயம்தான். அவர் எது நடைபெறக் கூடாது என்று விரும்பினாரோ அதுதான் இன்றைய நவபாரத சுபீட்ச வாழ்வில் தலைவிரிகோலமாக தாண்டவமாடுகிறது!

அரசியல் வானிலே, சண்டப்பிரசண்டம் செய்து வந்த ஆந்திரத்து சஞ்சீவி ரெட்டிக்கு அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பீடத்தை அர்ப்பணித்து, பஞ்ச(சீல) பாரதத்தின் அர்த்த சூன்யத்தைப் போதித்து புகழாபிஷேகம், தனாபிஷேகம் செய்து உச்சி குளிர வைத்து, வாயைக் கட்டி, கையைக் கட்டி உடன்ய அவர் புதிய ஜென்மமெடுத்ததை நாடே நன்கு அறியும்!

அப்படிப்பட்ட சஞ்சீவி ரெட்டி!...

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பீடத்தை நான்கு வேதம், ஆறு சாஸ்திரம் அறுபத்தி நான்கு கலா ஞானம் கற்ற மேதா விலாச கீர்த்தியோடு அலங்கரித்துக்கொண்டிருக்கும் சஞ்சீவி ரெட்டி!....

காந்தியின் உயிரை மட்டும் கொன்ற கோட்ஸேயையும் மிஞ்சி அவரது கொள்கையை-அந்த கொள்கை பிறந்த உள்ளத்தை காந்தியின் தீண்டாமையை ஒழித்த பெருமையை—அந்த பெருமையை நாடெங்கும் போதிக்கும் நல்லவர்களை—

சவக்குழிக்கு அனுப்புகிறார்!

சதிசெய்து கொல்லுகிறார்!

கல்லறை கட்டுகிறார்!

கடுந்தீயில் எரித்து அந்த சுடுகாட்டுச் சாம்பலை காற்றிலே பறக்கவிடுகிறார்! அந்தோ பரிதாபம்!

ஆமாம்; எந்த வேதனையை பொறுக்க முடியாது என்று காந்தி 1940ல் கூறினாரோ அந்த வேதனையை அவர் காட்டிய வழியிலே நின்று இன்று செய்கிறார்!

நம்மையெல்லாம் திடுக்கிட வைக்கிறது! திகைக்க வைக்கிறது! ஆந்திரத்திலே சஞ்சீவி ரெட்டி ஜாதி கோஷ்டியை வளர்த்து கலவரங்களை வளர்க்கிறார்; அடிதடிகளை உற்பத்தி செய்கிறார் என்ற செய்தி!

இந்தக் கோஷ்டித் தகராறு ஆந்திர மாநிலத்தில் மட்டுமா? இப்படிப்பட்ட ஜாதி ‘குரூப்’புகள் இன்னும் இந்தியாவின் எந்தந்த பாகத்தில் இருந்து கொண்டு எந்தந்தக் கலவரங்களை, அடிதடிகளை, கிளர்ச்சிகளை எழுப்பிக் கொண்டிருக்கின்றன? இன்னும் எந்தந்த மாநிலங்களில் காந்தியின் உயிர்க்கொள்கைகளை அழிக்க காங்கிரஸ் பெருந்தலைகள் முயற்சி செய்து வருகின்றன? என்ற வினா நம்மிடையே எழுவதில் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை!

சமீபத்தில் அமிர்சரசில் காந்தி சிலையை திறந்துவைத்து பேசிய ராதாகிருஷ்ணன் குறிப்பிடுகிறார்.

“இந்தியாவின் சகல துறையிலும் உடனடியாக ஒரு மாற்றம் வேண்டும். இந்தியா சுதந்திரமடைந்ததற்குப் பிறகு அதிகார ஆசையும், பதவி வெறியும், ஜாதிப் பூசலும் மாகாணப் பித்தும், அரசியலில் கோஷ்டிச் சண்டைகளும் நிரம்பிவிட்டன என்று!

டாக்டர் ராதாகிருஷ்ணன் எதை மனதில் வைத்துக் கொண்டு இப்படிப் பேசினார்? இன்னும் அதிகார பீடத்திலே உள்ள எந்த தலைவர்கள் தனக்குப் பின் தனது ஜாதி அடிப்படையிலே கோஷ்டி சேர்ந்து காந்தியின் உன்னதக் கொள்கைக்கு உலை வைக்கிறார்கள்?

இன்னும் சஞ்சீவி ரெட்டியைப்பற்றி நாம் குறிப்பிட வேண்டுமானால் உண்மையிலேயே காந்தியைக் கொன்றது இவர்தான் என்ற

(10ம் பக்கம் பார்க்க)

குற்றமும் சாட்டலாம். அன்று கோட்ஸே கொன்றது காந்தியின் உடலை! அன்று கோட்ஸே கொன்றது காந்தியின் அங்கத்திலே இழையோடிக் கொண்டிருந்த உணர்ச்சியை! அன்று கோட்ஸே அழித்தது காந்தியின் மாமிச உருவை!

ஆனால் !...

சஞ்சீவி ரெட்டியோ காந்தியின் கொள்கையை அழிக்கிறார்! "அறிஞர்கள் சாகமாட்டார்கள் அவர்கள் என்றுமே வாழ்கிறார்கள்" என்ற மொழிக்கிணங்க இந்தியத் துணைக்கண்டமெங்கும் — அகிலமெங்கும் வாழ்ந்து வரும் காந்தியைக் கொன்று விட்டார் சஞ்சீவி ரெட்டி!

"காந்தியின் பூதஉடல் தான் மறைந்தது. புகழுடல் மறையவில்லை" என முழக்கும் காங்கிரஸ் வீரர்களே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? — காந்தியின் சமய ஜாதிபாகுபாடற்ற கொள்கையால் புகழ் நாட்டிய அந்த அமரத் திரு உருவை அழித்த சஞ்சீவி ரெட்டியை என்ன செய்யப் போகிறீர்கள்?

காந்தியின் கொள்கைக்கு அவர் காட்டிய முக்கிய ஸ்தானத்திலே இருந்து கொண்டு உலைவைத்த சஞ்சீவி ரெட்டிக்குக் கல்தாவா அல்லது ஆயுள் தண்டனையா? காந்தியின் பூத உடல் மறைய காரணம் கோட்ஸே என்றால் அவரது புகழுடலையும் அந்தர் தியானமாக்க சஞ்சீவ ரெட்டி வழி வகுக்கிறார் என்று கூறுவதில் என்ன தவறு?

இப்படிப்பட்ட கோஷ்டிச் சண்டைகளால் காங்கிரஸ் நாள்தோறும் தேய்ந்து வருகிறது! மக்கள் இந்த அக்ரமக்காரர்களின் வஞ்சகத்தை உணர்ந்து விட்டார்கள். அதற்குப் பழிதீர்க்க அவர்கள் எதிர் பார்க்கிறார்கள் — ஜனநாயக அடிப்படையிலே அளிக்கப்பட்டிருக்கும் வோட்டின் மகிமை உணர்த்தும் திருநாளை!

---

## கலைத் துறையில் விலாங்கு மனிதர்கள்!

## தமிழனென்று பெருமை பேசுவோர் சாதி வெறிகொள்ளும் கயமைத்தனம்!

❁❁❁

## இந்த எத்தர்கள் நீண்ட நாள் அரசியலிலும், கலைத்துறையிலும் ஏமாற்றமுடியாது!

★★★

"பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டுகின்ற விலாங்கு மனப்பான்மையுடன் அரசியல் உலகத்திலும் கலை உலகத்திலும் அதிக நாள் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. மனதில் பட்டதை தைரியமாகக் கூறி, தான் யார்—தன் கொள்கையென்ன—சமுதாயத்திலோ அரசியலிலோ தனக்குரிய இடம் எது — என்பன வகையையும் மறைத்து மழுப்பாமல் வீரத்தோடு பேசக் கூடியவனே சரியான மனிதனாவான். அந்த மனித சமுதாயத்தில் பெருமைக்குரிய தமிழ் இனத்தைச் சார்ந்தவன் நான் என்று மார்தட்டிக் கொள்ளுகிறவர்கள், தமிழ்ப்பண்புக்கு முரண்பாடான சாதிப்பெருமையையும் பேசிக்கொள்வது என்பது கேலிக் கூத்தாகவே இருக்கிறது. இந்த இருபதாம் நூற்றுண்டிலும் சாதி வெறியுடன் பலர் உலவுகிறார்கள். அவர்கள் மேல் நாட்டு நாகரீகத்தையும் விஞ்ஞானத்தையும் புகழ்கிறார்கள். மேல் நாடு சுற்றி விட்டும் வருகிறார்கள். இங்கே வந்ததும் பகுத்தறிவுக்கு மாறுபட்ட செயல்களிலே ஈடுபடுகிறார்கள். சமுதாயத்தில் இந்த வேடதாரிகளுக்கு இடமளித்தல் கூடாது என்பதே தி. மு. கழகத்தின் சமுதாயக் கொள்கையாகும்"

கலைவள்ளல் எம். ஜி. ஆர்

---

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம்:

# கேரளத்தின் பங்கு எச்சில் இலை டெல்லியின் ஓர வஞ்சனை:

★

## கேரளப் பத்திரிகை குமுறல்!

டில்லியில் ஒரு விருந்து நடக்கப் போகிறது என்ற விவரம் அறிந்த கேரள மந்திரிகள் அங்கே போனார்கள். அந்த விருந்தில் பவுனும், டாலரும், ரூபிளுமாக பதார்த்தங்கள் பரிமாறப்பட்டன. அவைகள் அழைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே கிடைக்கும், அழைக்கப்படாதவர்கள் போகக் கூடாது என்பதில்லை. எந்த விருந்திலும் சில ஆண்டிப்பண்டாரங்கள் பந்தல் பக்கத்தில் கூடுவார்கள் அல்லா? விருந்தில் அழைக்கப்பட்டவர்களுடைய உணவு முடிந்தது. பாக்கியுள்ளது வெளியில் உள்ளவர்களுக்கும் கிடைக்கும் பாயசமும் வடையும் உள்ளே உள்ளவர்களுக்கு பரிமாறப்படும்

"பிரமுகர்களே! இங்கே ஓடிவாரீர்! இங்கே எச்சில் இலைகள் நிறைய விழுகின்றன."

பட்டமும், சங்கரும் சாக்கோவின் பக்கம் ஓடுகிறார்கள். அப்போதே தீர்ந்துவிடும் ஊறுகாயும் உப்பும்தான் வெளியே உள்ளவர்களுக்கு மிஞ்சும்.

டில்லியில் நடந்த விருந்துக்கு மாகாண மந்திரிகளை அழைத்திருந்தார்கள். கேரள மந்திரிகளை விட்டுவிட்டார்கள். பந்த் மொரார்ஜி இதனை வேண்டுமென்றே செய்திருக்க வேண்டும் அது கேரளத்தின் மீதுள்ள வெறுப்பு மட்டுமல்ல; தென்னிந்தியாவின் மீது பொதுவாக அவர்களுடைய மனோபாவமும் அதுதான்.

அழைக்கப்படாத கேரள மந்திரிகள் விருந்துப் பந்தலுக்கு வெளியே நின்றார்கள். முதல் பந்தலில் கோலோகலம்! உள்ளே நெரு போடும் சத்தம் வெளியே கேட்டது.

"இந்தப்பந்தியில் டாலர் போட்டியா" ரூபிள் எடுத்து வந்து அங்கே போடு அதோ அங்கே பரிமாறுவது ஏன்? வெளியே நின்ற கேரள மந்திரிகளுக்கு வாயில் தண்ணீர் ஊறியது நிதி மந்திரி சங்கரன் விருந்துப் பந்தலின் கிற்றுச்சந்தின் வழியாக உள்ளே பார்த்தார் ஒளிந்து கொண்டு! அதை மொரார்ஜி பார்த்துவிட்டார்.

மொரார்ஜி: யார் அது?

சங்கரன்: கேரள மந்திரி சாமி

மொரார்சி: அந்தஸ்துள்ளதர் சாப்பிடுகிற இடத்தில் ஆண்டிகளுக்கு என்னவேலை? இத்தப்

(12-ம் பக்கம் பார்க்க)

---

சென்னை மாநிலத்திலே தேர்தல் நெருங்க இங்குள்ள மந்திரிகளின் நாக்கும் உடலும் சாக்கடைப் புழுவாக நெளிகின்றன. ஏதேதோ பேசுகிறார்கள். என்னன்னவோ பேசுகிறார்கள். அவர்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் நம்ப முடியாத நிலைக்கு சூழ்நிலை உருவாகி வருவதை அரசியல் வட்டாரங்கள் நன்கறியும்.

விருதுநகர் ராக்கெட், கோவை டாங்கியைத் தாக்குமா? கோவை டாங்கி செங்கற்பட்டு கோட்டையை தகர்க்குமா? என்ற சுவையான செய்திகளை மக்கள் எதிர் பார்க்கவில்லை— இவர்களின் கோஷ்டிச் சண்டையால் எழும் பூசல்கள். அந்தப் பூசல்களால் அம்பலமாக்கப்படும் மேலிடத்து விவகாரங்கள், அவைகள் உணர்த்தும் இருட்டறை ரகசியங்கள் என்ன? அவைகளுக்கு ஜனநாயக உரிமையால் அளிக்கப் போகும் சவுக்கடி—பரிசு எப்படி இருக்க வேண்டும் என்பதே இப்போது மக்களின் பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

விருதுநகர் கொரில்லா தாக்கு கோவை நண்டுப் பிடி முன் பலிக்காமல் போகலாம். கோவை நண்டுப் பிடி, செங்கற்பட்டு குரங்குப் பிடி முன் பலமிழக்கலாம்!... ஆனால் மக்களின் வாக்குச் சீட்டு முன்பு எந்தபிடி நிற்கும்?

காந்தியின் கொள்கைக்கு வேட்டு வைக்கும் சஞ்சீவி ரெட்டி முதற் கொண்டு அவரது தேவாதி தேவன் தேவ மார்த்தாண்டன் நேருவரை மக்கள் சக்திக்கு திணறித்தான் பணிய வேண்டும்!

மக்கள் சக்தி — கோஷ்டிச் சண்டை வளர்க்கும் லஞ்ச ஊழல்கள் மலிந்து நிற்கும் காங்கிரஸுக்குத்தான் என்றால், 20 நூற்றுண்டுகளுக்கு முன் வாழ வேண்டிய மக்கள் ஜனயுகம் இது என நினைத்து காங்கிரஸ் பீடாதிபதிகள் கொக்கரிப்பதில் தவறு இருக்க முடியாது?

# அமைச்சர்களோ மக்களை மயக்குகிறார்கள்; காங்கிரஸ் தண்டர்களோ மக்களை கொலைசெய்கிறார்கள் !

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள். இது மாறத்தான் திராவிடநாடு கேட்கிறோம். திராவிடநாடு என்ற உடனே ஆந்திரம், கேரளம், கன்னடம் கேட்டதா என்று கேட்டவர்களுக்கு நான் சொல்லுகிறேன். இதைவிட அதிகமாக அண்டைமாநிலங்கள் கேட்டது. அங்கே இருக்கின்ற தி. மு. க. கிளைகள் கேட்கவில்லை கேரளத்திலே கோட்டளம் என்னும் ஊரிலிருந்து வெளிவருகிற சரசன் என்னும் வாரப் பத்திரிக்கை எழுதிக் காட்டுகிறது. டில்லியிலே நடைபெறுகின்ற விருந்துக்கு சென்ற கேரள மந்திரிகள் அங்கே வடவர் சாப்பிட்டு விட்டு வெளியே போட்ட எச்சிலைகளை தூக்கிக்கொண்டு வந்தார்கள் என்று தெளிவாக அந்தப் பத்திரிகையிலே எழுதிக் காட்டப்பட்டிருக்கிறது. கேரளம் கேட்டதா என்போரே! இதனை நான் சொல்லவில்லை கேரளப் பத்திரிகைச் சொல்லுகிறது, ஆந்திரம் கேட்டது. ஒரு மந்திரிப் பதவியை தூக்கியெறிந்து சரிபடுத்திவிட்டார்கள். மைசூர் கேட்டது அங்கே மந்திரி சபையிலே குழப்பம், அவர்கள் எதைத் தீர்ப்பது என்ற நிலையிலே அவதிப்படுகிறார்கள். இப்படி திராவிடம் முழுவதும் எரிமலை வெடித்துவிட்டது. புகையைக் கக்கிக் கொண்டிருக்கிறது. தீப்பற்றி விரைவிலே எரியத்தான் போகிறது.

இங்கே பேசுகிற அமைச்சர்கள் எதைச் சொன்னாலும் ஒண்ணே ஒண்ணு நெய்வேலி அதைத் தான் குறிப்பிடுகிறார்கள். அதிலும் வேலி நமக்கு நெய் வடநாட்டனுக்கு. கிடைக்கின்ற வருமானத்திலே ரூபாயில் முக்கால் பங்கு அவனுக்கு கால்பங்கு இவர்களுக்கு. இவர்கள் பேசுகிறார்கள் நாங்கள் சாலை போட்டோம், சோலைகள் அமைந்தோம். பள்ளிகள் கட்டினோம். மருத்துவமனைகள் கட்டினோம் என்று. இதைத்தானா ஒரு அரசாங்கம் செய்யும். இவைகளை எல்லாம் சாதாரண நகரசபை செய்யும்.

வெள்ளைக்காரன் காலத்திலே இல்லாததை இவர்கள் என்னச் செய்தார்கள் புதிதாக ரயில்பாதை, தபால் ஆபீஸ் உண்டாக்கினார்களா? ஏதோ பள்ளிக்கூடம் கட்டுகிறார்களாம், பள்ளிக்கூடம்தானா ஒரு நாட்டின் முன்னேற்றப்பாதை' இங்கே வாழ வழியற்றவர்களுக்கு வேலை கொடுக்க அருகதை இல்லை. ஏழைப் பாட்டாளி தொழிலாளிவாழ தொழிற்சாலை என்ன, அணைக்கட்டு என்ன கட்டினாய், அதைச் சொல்ல யோக்யதை இல்லாமல் மேடை அமைத்துக் கொண்டு ஊர்தோறும் பேசி என்னப் பயன்? நீங்கள் நல்லது செய்திருந்தால் மக்களுக்கு நீங்கள் சொல்லித் தெரியவேண்டிய அவசியமில்லை அவர்களாகவே தெரிந்துகொள்ளுவார்கள், நீங்கள் செய்யவில்லை என்று உங்கள் மனதுக்குத் தெரியும். ஓடுகிறீர்கள். மக்களைச் சந்திக்க. 62-க்கு ஓட்டு வாங்க இப்போதே விஷமத்தனமான பிரச்சாரம் செய்கிறீர்கள் சென்ற மாதம் 15-ம் தேதி பக்தவச்சலம் சொன்னார். உணவு நிலைமையில் உற்பத்தி அளவு சென்ற ஆண்டைவிட இந்தாண்டு திருப்திகரமாக இருக்கிறது. இப்படிச் சொன்ன 1 மாதகாலத்திற்குள் நியாய விலைக்கடைகள் திறக்கப்படுகிறது. 1 மாதத்தில் நிலைமையை யூகிக்க முடியாதவர்கள் மக்களுடைய எதிர்காலத்தை எப்படி நிர்ணயித்து ஆளப்போகிறீர்கள் என்று கேட்டால் பெரியாரே சொல்லிவிட்டார் ஆதரவு தருவதாக கவலையில்லை என்கிறார்கள்.

மின்சார அமைச்சர் ராமையா என்னுடைய தொகுதிக்குச் சென்று ஊராட்சி மன்றத் தலைவர்களை சந்தித்து கதர்சட்டை போட்டுக்கொள்ளும்படி வற்புறுத்துகிறார். இப்படி ஏன் பிழைக்கிறீர்கள் என்றுதான் கேட்கிறோம். இதை நான் இங்கே மட்டுமல்ல சட்டமன்றத்திலேயே கேட்டேன். மானமில்லாமல் 13 ஆண்டுகாலமாக இல்லாத கேடுகெட்ட நிலைமையை இப்போது உண்டாக்குகிறீர்கள் இருட்டியதும் விளக்கு இல்லையா? இந்த ஊருக்கு. சரி 10 பேர் கையெழுத்துப் போடுங்கள், உடனே விளக்குப் போடுகிறேன் என்றுச் சொல்லி வருகிறார். ஒருபுறம் அமைச்சர்கள் மக்களை மயக்குகிறார்கள். மறுபக்கம் காங்கிரசு குண்டர்கள் கொலைசெய்கிறார்கள்.

சமூகத்தை வருகின்ற தேர்தலில அடியோடு ஒழித்துவிடவேண்டும் என்ற எண்ணத்தில் கடந்த 5, 6 மாதத்தில் காங்ரசாருக்கு நம் செய்த இழப்பு எண்ணற்றவை குடந்தையிலே இராமலிங்கம், கோவையிலே ஆரோக்கியசாமி. இப்படி சென்

(அடுத்த பக்கம் பார்க்க)

நமக்குப்பின் சுதந்திரமடைந்த

## சீனா நாட்டைப் பிடிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது! இவர்களால் சோற்றுப் பிரசினையைக் கூட தீர்க்கமுடியவில்லை!

### வெட்கம்! வெட்கம்!

⊕⊕⊕

காங்கிரஸ் கட்சியில் இன்று கொள்கை கிடையாது. ஆளுக்கொரு கொள்கையை வைத்துக்கொண்டு பேசுகிறார்கள்! இளைஞர் காங்கிரஸ்காரர்களை உங்கள் கொள்கை என்னவென்று கேட்டால் தற்போது 200 ரூபாய் சம்பளம் வாங்குகிறேன் இன்னும் கொஞ்சம் அதிகம் கொடுத்தால் பரவாயில்லை என்று சொல்லுகிறார்கள்.

மண்டலக் காங்கிரஸ்காரரை உன் கொள்கை என்ன என்று கேட்டால், ஒரு எம். எல். ஏ. பதவி கிடைத்தால் போதும்; அதுதான் என் லட்சிய மண்டலம் என்று கூறுகிறார். காங்கிரஸ் எம். எல். ஏ. விடம் உங்கள் கொள்கை என்னவென்று கேட்டால், மந்திரியானால் போதும் நான் நிம்மதியாகி உயிர் விடுவேன் என்று கூறுவார்.

மந்திரியைக் கேட்டால், டெல்லியில் மந்திரி பதவி கிடைத்தால்தான் என் ஆவி பிரியும் என்று தன் கொள்கையைக் கூறுவார் இதுதான் இன்றைய காங்கிரஸ்காரர்களின் கொள்கைள்.

நேருவுக்கு நாம் யார் என்பது தெரியும். ஆகவேதான் இந்திப் போராட்ட அறிவிப்புக்குப் பயந்து கடிதம் எழுதினார். ஆனால் காமராசருக்கு நம் போராட்டம் தெரியாது—புரியாது!

காமராசர் சாமிக்கு முன்னே போகும் உள்ளூர் மேளம். அந்த உள்ளூர் மேளக்காரருக்கு ஒரே பாட்டுத்தான் தெரியும். அதாவது காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள் என்ற ஒரே பாட்டைத்தான் திரும்பத் திரும்பப் பாடத் தெரியும்!

இவர்களின் 13 வருட ஆட்சியில் சோறு இல்லை! கேட்டால் ராட்டை சுற்றச் சொல்லுகிறார்கள்!!

நாய் ராக்கெட்டில் ஏறி உலகத்தைச் சுற்றி வரும் இந்தக் காலத்தில் இவர்கள் ராட்டையைச் சுற்றச் சொல்கிறார்கள்!

ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால், சிறிய கைத்தொழிலுக்கு பணம் கொடுத்திருக்கிறார்கள். உசிலம்பட்டியில் ரூபாய் அறுபதாயிரம் செலவில் ஒரு திட்டம். உள்ளே போய்ப் பார்த்தால் கோழிப் பண்ணை வைத்திருக்கிறார்கள்!!

நமது அண்டை நாடு சீனா நாட்டைப் பிடிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது! இவர்களால் 13 வருட ஆட்சியில் சோறு போட முடியவில்லை! கேட்டால் முயற்சி செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள்! வெட்கமில்லையா?

கவிஞர் கண்ணதாசன்

Registered as a Newspaper in CEYLON

வெளிநாடு 20 சதம்

Regd.No.M. 7074 **MALAIMANI** விலை 16 காசு Phone 83285

# 1962ல் காங்கிரஸ் பிணமாவது உறுதி!

## நீதி அழிந்தது! நேர்மை ஒழிந்தது! நேருபிரான் கண்ணீரே காங்கிரசுக்குப் பெருநெருப்பு!

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பிடமாக அதை உற்பத்தி செய்கிறார்கள்.

கிருஷ்ணா ஜில்லாவில் காங்கிரஸ் மேலிடம் செய்த ஒரு அக்ரமத்தை நம்மால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. பெனுமலூர் என்ற கிராமத்தில் உள்ள ஒரு குளம் அங்கு வாழும் ஏழை விவசாயிகளுக்குக் குடிநீர் கஷ்டத்தை நிவர்த்தி செய்தும். தேவைப்படும்போது அங்குள்ள குடியானவர்களின் விவசாயத்திற்குத் தண்ணீரையும் அளித்து வந்தது. இதனால் அங்குள்ள பஞ்சாயத்து போர்டுக்கும் சிறிது வருமானமும் கிடைத்துக் கொண்டிருந்தது.

ஆனால் இந்திய விடுதலைக் காலத்திலே கஷ்டப்பட்டவர் என்று சொல்லிக் கொண்டு வாழும் சில 'கதர் பூதாகாரங்களுக்கு நிலம் கொடுத்து நன்றி தெரிவித்த இந்த சர்க்கார்—அந்த கிராமத்திலும் நிலம் வழங்கி—அந்த தியாகிகளுக்கே குடிசை வாழும் மக்களின் 'அமுத சுரபி'யான குளத்தையும் உரிமை செய்து விட்டனர்!

ஏழை விவசாயிகள் நீர் அருந்த எங்கே செல்வார்கள்? இருந்த ஒரே ஒரு குளத்தையும் காங்கிரஸ் மகா தியாகிகளுக்கு சாஸனம் செய்து விட்டால் விவசாயத்தை நம்பி வாழ்ந்த அந்த குடியானவர்கள் எப்படி விவசாயம் செய்ய முடியும்? எப்படி வயிறு பிழைக்க முடியும்? பென்னுமலூர் பிணமாக வேண்டுமா? அங்கே—அந்த பிணக் குவியல்களிலே குளத்து நீரைப் பாய்ச்சி ஏர் பூட்டி காலைகட்டி பரம்படிக்க வேண்டுமா?...

விடுதலை தியாகிகளுக்கு நன்றிக்கடனை தெரிவிக்க வேண்டுமென்றால்...பெனுமலூர் பிணபிணமாக வேண்டுமென்கிறதா. காங்கிரஸ்?... அப்படிப்மாகத்தான் வேண்டுமென்று காங்கிரஸ் மேலிடம் கருதினால் நிச்சயம் பிணமாகப் போவது பெனுமலூர் அல்ல—காங்கிரஸ்! ஆமாம் 1962லே தேர்தல் களத்திலே குதிக்கப்போகும் காங்கிரஸ் பிணமாகும். மேலும் காங்கிரஸ் பஞ்சாபிலே செய்த ஒரு அநீதியை குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பஞ்சாபில் உள்ள குடியானவர்களுக்கு- அதாவது நிலமற்ற அந்த ஏழை உழைப்பாளர்களுக்கு நிலம் வழங்குவதற்காக ரூபாய் 14 லட்சம் ஒதுக்கப்பட்டது! இந்தப் பதினான்கு லட்சத்திலே ஒரு நயா பைசாகூட இதுவரை செலவழிக்கப் படவில்லை என்று 'பிளிட்ஸ்' இதழ் கூறுகிறது. மேலும் ஒரு வெட்கக்கேடு, மூன்றுவது ஐந்தாண்டுத்திட்டத்தில் இதே பிரச்சினைக்காகத் தேவை என்று கேட்கப்படும் ரூபாய் 1.93 கோடி!

—இங்கு சுதந்திரம் தவழுகிறதா? ஜனநாயகம் கடைபிடிக்கப் படுகிறதா? காங்கிரஸ் ஆட்சியில் இருக்கிறதா? அல்லது நடுத்தெருவிலே — பட்டப்பகலிலே கொள்ளையடிக்கும் திருட்டு கோஷ்டியினர் ஆட்சியிலே இருக்கிறார்களா?

ஏழைகளுக்கு இடமளிக்க வேண்டுமென்று 4000 பேர்களை அவர்களது நிலத்திலிருந்து வெளியேற்றிவிட்டோம் என்று அதிகாரபூர்வமாக அறிவித்த அந்த சர்க்கார் அங்கே குடியேற்றியது எத்தனைபேரை?... நான்கு பேர்கள்!

ஆமாம், நான்கே பேர்களே!

இந்த வேடிக்கை, இந்த வினோதம் ராம, லட்சுமணன் ஆண்ட - பஞ்சபாண்டவர்கள் அவதரித்த இந்த மகாமகா பாரதத்தைத் தவிர வேறு எங்கு நடைபெறும்! - காண முடியும்? அங்குள்ள 24.5 லட்ச ஏக்கர் நிலம் சுமார் 5 லட்சம் ஏழைகளுக்கு போதுமானது என்று ஒரு ஆங்கில இதழ் கூறுகிறது.

இவ்வளவையும் அங்குள்ள பணமுதலைகள் வாரிச்சுருட்டி விழுங்கிக் கொண்டிருக்கின்றனர். இரண்டு சட்டம் போட்டார்கள் பஞ்சாப் மாநிலத்து அரசினர்—எதற்கு? -ஏழைகளை ஏமாற்றுவதற்கு! - பணமுதலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அல்ல!

இப்படி ஒவ்வொரு மாநிலங்களிலும்-காங்கிரஸ் ஆட்சியினர் பகற்கொள்ளையடிக்கின்றனர். மக்களின் வரிப்பணத்தைக் கொட்டி எழுப்பப்படும் பிரும்மாண்ட தொழிற்சாலையானாலும்—அணைக்கட்டு ஆனாலும் அங்கங்கே ஊழலும், லஞ்சமும், தலைவிரித்தாடுகின்றன.

பொறுப்புள்ள பெரிய தலைவர்களே ஜாதிப்பூசலைக் கிளப்பி மக்களிடையே குரோத மனப்பான்மையை வளர்க்கிறார்கள். வெள்ளையர்களுக்குப் பின் ஆட்சிபீடத்திற்கு வந்த காங்கிரசார் மக்களை மக்களாக மதிக்கவில்லை-காட்டு மிராண்டிகள் என்று, பைத்தியக்காரர்கள் என்று, முட்டாள்களென்று' பசித்த நேரத்திலே எதையாவது அள்ளிப்போட்டு வயிற்றை வளர்க்கும் கேடுகெட்ட ஜென்மங்கள் என்று நினைக்கின்றனர்

'பிளிட்ஸ்' என்ற ஆங்கில இதழ் கேட்கிறது. "Have we adopted the temper of peace in our approch to the nations problems? Have we accepted the Panch sheel at home? Do we strive to live in peace full co-existence and engage ourselves in Co-operative Competition?

மேலும் அந்த இதழ் கேட்கிறது.

"அசாமிலே என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது? தண்ணீர் பிரச்சினை குறித்து இந்தியத்தாயின் குழந்தைகளிடையே இன்னும் என்னென்ன நிகழப்போகிறது? பழம் பெருமை வாய்ந்த பாரதத்தில் மொழிவெறி கொண்டவர்களின் உணர்ச்சி இன்னும் எப்படி யெப்படி வெளிவரப் போகிறது? பல்வேறு கோஷ்டிகள் கட்சிகள், வகுப்புகள் — அவையவைகளை சார்ந்தவர்கள்—சாராத தனிப்பட்டவர்களிடையே என்னென்ன எழப்போகின்றன!"

இப்படி கேள்வியாக கேட்கிறார் அந்த ஆசிரியர்! கேட்டுக் கேட்டு சலித்துப்போகிறார் அந்த ஆசிரியர்! யாரால் பதில் சொல்ல முடியும்? "ஜெ, பாரதமாக்கே, ஜே" என்று முழக்கமிடும் காங்கிரஸ்காரர்கள் எப்படி பதில் செல்லமுடியும்? எந்த பொறுப்புள்ள காங்கிரஸ் பீடாதிபதி மனசாட்சியை மறைக்காமல் பதில் சொல்ல முடியும்? மேலும் அந்த ஆசிரியர் மனம் வருந்தி கண்ணீர் விட்டுக்கேட்கிறார்!

"Are we live true to the Indian Tradition? Are we casting ourselves in the Image of our great leader Nehru? Are we now that we have been free and sovereign over a decade, putting in national behaviour the norms with we have preached to the world for inter national behaviour?"

இதைத் தான் நாமும் காங்கிரஸ் உபதேசிகளை நோக்கிக் கேட்க ஆசைப்படுகின்றோம்!

இவ்வளவு ஊழல்கள், இவ்வளவு முடை நாற்றங்கள்

(7ம் பக்கம் பார்க்க)

---

(10ம் பக்கத் தொடர்ச்சி)

லைப் பாண்டியன், தாளமுத்து நடராசன்,, உடையார் பாளையம் வேலாயுதம் இவர்களின் ஜீவ சக்தி வீண் போகாது. விடுதலை அணி வகுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து நடத்துகிறது. தொடர்ந்து தென்னகம் வஞ்சிக்கப்படுவதை நீங்கள் உணருங்கள் உங்கள் உள்ளத்திலே பொங்குகிற உணர்ச்சி விடுதலையை வாங்கித் தரும் என்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன் வணக்கம்,

---

(10ம் பக்கத் தொடர்ச்சி)

பிச்சைக்காரர்களை வெளியே விரட்டுங்கள். அதற்குள் கேரள கட்சித்தலைவர் சாக்கோ வேறு இடத்திலிருந்து சப்தம் போடுகிறார்.

சாககோ எச்சில் இலைகளில் பொறுக்கும் டாலர் துண்டுகளை பாண்டிசேரிக்காரன் பறிக்கத் தொடங்கவே ஒரே சத்தம் ரகளை சண்டை!

"போயும் போயும் எச்சில் இலையை பொறுககுவதா என்கிறார் பட்டம்தாணு சாக்கோ கூச்சப்படாமல ஏதாவது கிடைப்பதையும் எவனாவது கெட்டிக்காரன் கொண்டுபோய் விடுவான்...தெருவில் சப்தம் கேட்டு வெளியே பந்து வருகிறார்

"ஐயா எங்களுக்கு எச்சில் இலை, இல்லை எங்களுககுததான் என்று கேரளமும் பாண்டிச்சேரியும் தகராறு செய்கின்றன.

"சரி! இருஇடங்களில் எச்சில் இலை போடச் சொல்கிறேன் என்கிறார் பந்த்!

அந்த இலைகளில் டாலர் பாயசமும், பவுன் வருவலும் இருக்குமா? என்கிறார் பட்டம்தாணு! பந்த் அது உள்ளே சாப்பிடுகிறவாகள் விருப்பத்தைப் பொருத்தது. சிலர் என்ன மரிமாறினாலும் தின்று விடுவார்களே! இலையில் கொஞ்சம் மிச்சம் வையுங்கள் என்று நாங்கள் கூற முடியுமா? பொறுமையுடன் ஒவ்வொரு இலையையும் ஆராய்ந்து பாருங்கள். எதாவது கிடைக்கும். அவர் உள்ளே போகிறார்! இவர்கள் வெளியே நிற்கிறார்கள் எச்சில் இலைகளுக்காக!

---

ஆசிரியரும், 'வெளியிடுபவரும்,' அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம் 1-35, வாணியர் தெரு. சென்னை-14.